padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

இலங்கையைப் பாதுகாப்பதற்கு தங்களது உதவிதேவை. அதாவது இலங்கையில் உள்ள தங்களது பொருளாதார இராணுவ நலன்களை பாதுகாப்பதற்கு. இலங்கையர்களுக்கு (சிங்களவர்களுக்கு) இந்தியாவால் ஆபத்து- இதுபோன்ற பிற அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் கடமையை பிரித்தானியா செய்யும் என்கிற ஒரு கபட நாடகத்தை பிரித்தானிய ஆளும் வர்க்கம் நடத்தியது.

## பகுதி II

22

சோல்பரி ஆணைக் குழு இலங்கைக் கான தனது அரசியலமைப்புத் திட்டத்தை பிரித்தானிய அரசிடம் சமர்ப்பித்த காலகட்டத்தில் இலங்கையில் இருந்து இடதுசாரிக்கட்சிகள் மிகப் பெரிய தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில் 1947ம் ஆண்டு நடுப்பகுதியில் வெள்ளையர் மாளிகையில் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய டி.எஸ். சேனநாயக்கா, நாடு முழுவதிலும் ஏற்பட்டிருந்த இந்தத் தொழிலாளர் எழுச்சியை 'சிவப்பு அரசியல் நெருக்கடி' என்றும், அரசியல் அதிகாரத்தை தங்கள் கைகளுக்கு மாற்றித்தராவிட்டால் இலங்கையில் ஒரு கம்யூனிசப் புரட்சி நடைபெறுவது தவிர்க்க முடியாதென்றும் எடுத்துரைத்தார்.

டி.எஸ். சேனநாயக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம், தேர்தல் ஒன்றை நடாத்தி இடதுசாரிகளுக்கு எந்தளவுக்கு செல்வாக்கு இருக்கிறது என்பதை நாடி பிடித்துப் பார்க்க பிரித்தானியக் கனவான்கள் விரும்பினார்கள்.

அதன்படி 1947ம் ஆண்டு சோல்பரி திட்டத்தின் அடிப்படையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட்டது. 101 பாராளுமன்றத் தொகுதிகளுக்கு நடந்தத் தேர்தலில் 'மார்க்சிச தீயிலிருந்து பௌத்தத்தைக் காப்பாற்றுங்கள்' என்கின்ற கோஷத்தோடு போட்டி

# 1947ல் ஏற்பட்ட சிவப்பு அரசியல் நெருக்கடி

1947ம் ஆண்டு மே, யூலை மாதங்களில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் இணைந்து மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தின.

கம்யூனிஸ்ட் கட்சியின் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம்; சமஜமாஜக் கட்சியின் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் மற்றும் இரண்டு கட்சிகளாலுமே ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் தலைமைதாங்கப்பட்ட அரசாங்கத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் என்பன ஒன்றிணைந்து 1947ம் ஆண்டு பிரித்தானியக் காலனிய அரசுக்கு எதிராகவும் அதன் நிழல் அரசாக இருந்த சுதேசியக் கனவான்களின் அரசுக்கு எதிராகவும் மாபெரும் வேலை நிறுத்தப்போராட்டம் ஒன்றை நடத்தின.

ஒரு கட்டத்தில் 50,000 ஊழியர்கள் வீதியில் இறங்கி ஒரு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

ஒரு ஆர்ப்பாட்டத்தில் கந்தசாமி என்ற அரசாங்க எழுதுவினைஞர்கள் காலனிய பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட தொழிலாளர்கள் கொதித்து எழுந்தனர். இலங்கை முழுவதிலும் காலனிய அரசுக்கு எதிராக தொழிலாளர்கள் எழுந்தனர்.

இந்தக் கருத்தை அக்காலத்தில் இருந்த யாழ்ப்பாணத் தமிழ் கனவான்களும் ஆமோதித்தனர். அதற்குக் காரணம்- அவர்களுக்கு, கம்யூனிசம் என்பது தங்களால் சாதியின் பேரால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் அரசியலாக அதாவது தீண்டத்தகாத ஒரு அரசியல் சித்தாந்தமாக இருந்ததே ஆகும்.

வெள்ளையர் ஆட்சி இருந்தாலும் பரவாயில்லை; தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கத் துடிக்கும் பௌத்த சிங்கள இனவாதிகளின் ஆட்சி இருந்தாலும் பரவாயில்லை ஆனால் கம்யூனிஸ்டுகள் மட்டும் ஆட்சியைக் கைப்பற்றிவிடக்கூடாது என்பதில் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள்.


பிரித்தானிய காலனிய நிர்வாகம், சிங்கள-தமிழ் கனவான்கள் தெரிவித்த இந்த 'சிவப்பு அரசியல் நெருக்கடி பற்றி' வெளிப்படையாக எதுவும் காட்டிக்கொள்ளவிட்டாலும் உள்ளூரப்பயங்கொண்டேயிருந்தது.

**கருத்தை அக்காலத்தில் இருந்த யாழ்ப்பாணத் தமிழ் கனவான்களும் ஆமோதித்தனர். அதற்குக் காரணம்- அவர்களுக்கு, கம்யூனிசம் என்பது தங்களால் சாதியின் பேரால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களின் அரசியலாக அதாவது தீண்டத்தகாத ஒரு அரசியல் சித்தாந்தமாக இருந்ததே ஆகும்.**

கம்யூனிஸ்டுகளை வளர விடுவது இலங்கையிலுள்ள தமது முதலீடுகளுக்கும் பொருளாதார நலன்களுக்கும் நல்லதல்ல என்று பிரித்தானிய அரசு நினைத்தது.

எனவே சோல்பரி ஆணைக் குழு சிபாரிசு செய்த புதிய

யிட்ட டி.எஸ். சேனநாயக்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 46 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. அந்தக் கட்சிக்கு 39.5 வீதம் வாக்குகள் மட்டுமே கிடைத்தன. தனித்தனியாகப் போட்டியிட்ட



மூன்று இடதுசாரிக் கட்சிகளுக்கும் 20 ஆசனங்கள் கிடைத்தன. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், ஜி.ஆர்.மேத்தா, எஸ். எம்.சுப்பையா, சி.வி. வேலுப்பிள்ளை, கே.ராஜலிங்கம், எஸ். தொண்டமான், கே.குமாரவேலு, டி. ராமானுஜம் ஆகிய 7 பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்தனர்.

தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு 7 ஆசனங்கள் கிடைத்தன. 20 ஆசனங்களை சுயேட்சை அபேட்சகர்கள் பெற்றார்கள்.

டி.எஸ். சேனநாயக்காவுக்கு 46 பிரதிநிதிகள் கைவசம் இருந்தாலும் எதிர்த் தரப்பில் 55 பிரதிநிதிகள் இருந்ததால் அவரால் தனித்து அரசு அமைக்க முடியவில்லை.

சோல்பரி அரசியல் திட்டம்- அது பரீட்சார்த்தமாக அமுல் நடாத்திய முதலாவது தேர்தலிலேயே நாற்காலிக்கான ஓட்டப் போட்டியொன்றைத் தோற்றுவித்தது.

ஐ.தே. கட்சியும், அதன் எதிரணியும் போட்டி போட்டிக் கொண்டு சுயேட்சை வேட்பாளர்களை தம்பக்கம் இழுத்து

ஆட்சியமைக்கப்படாது பாடுபட்டனர்.

எச். சிறிசங்கா என்பவரின் இல்லத்தில் ஐ.தே.கட்சி எதிர்ப்பாளர்கள் எல்லோரையும் ஒன்று கூட்டி ஐ.தே.கட்சி எதிர்ப்பு அதாவது முதலாளித்துவ எதிர்ப்பு, காலனிய எதிர்ப்பு நடத்துவதற்காக நடந்த புகழ் பெற்ற 'ஜமுனா' மாநாடு தோல்வியிலேயே முடிந்தது.

தமிழ் காங்கிரஸ் கட்சி உட்பட்ட, பல்வேறு சுயேட்சை உறுப்பினர்களும்- இடதுசாரி கூட்டணி அரசு ஒன்றை அமைப்பதை விட, ஐ.தே.கட்சி அரசுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துழைப்பதகு பேரம் பேசுவதிலேயே மும்முரமாக இருந்தனர்.

இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர்.டி. சில்வா சுயேட்சை உறுப்பினர்களை 'மூன்று தலைக் கழுதைகள்' என்று திட்டியதால், அதை சாட்டாக வைத்துக்கொண்டு அவர்கள் டி.எஸ்.சேனநாயக்காவுடன் போய்சேர்ந்து கொண்டனர்.

சோல்பரி பிரபுக்கும் பிரித்தானியகாலனிய அரசுக்கும் கூடஇந்த இழுபறி நிலையும் தங்களது நம்பிக்கைக்குரிய ஐ.தே.கட்சிக்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவளிக்கத் தவறியதும் டி.எஸ்.சேனநாயக்கா தெரிவித்தது போல் இடதுசாரிகள் பலம் பெற்றிருப்பதும் கவலை தரும் ஒன்றாகவே இருந்தது.

எனவே டி.எஸ். சேனநாயக்காவும் மற்றைய சிங்கள தமிழ் கனவான்களும் கோரிக்கை விடுத்த படி அமைப்பை முழுமையாக மாற்றாமல் ஆட்களை மட்டும் மாற்றும் விதத்தில் 'இலங்கைக்கு சுதந்திரம்' வழங்குவது என்ற கேலிக்கூத்தை அரங்கேற்ற திட்டமிட்டனர்.

அதற்கு முன்னோடியாக இலங்கையைப் பாதுகாப்பதற்கு தங்களது உதவிதேவை. அதாவது இலங்கையில் உள்ள தங்களது பொருளாதார, இராணுவ நலன்களை பாதுகாப்பதற்கு. இலங்கையர்களுக்கு (சிங்களவர்களுக்கு) இந்தியாவால் ஆபத்து- இதுபோன்ற பிற அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கையை பாதுகாக்கும் கடமையை பிரித்தானியா செய்யும் என்கிற ஒரு கபட நாடகத்தை பிரித்தானிய ஆளும் வர்க்கம் நடத்தியது. இந்த நாடகத்தின் பிரதான சூத்திரதாரியாக விளங்கியவர் அப்போது இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபராக இருந்த பிரித்தானிய சேர் ஐவர் ஜென்னிங் ஆவார்.

டி.எஸ்.சேனநாயக்காவின் மிக நெருங்கிய நண்பராக இருந்த இவர், 'இந்தியாவும் இலங்கையும் இணைக்கப்பட்டால் அவ்விணைப்பானது சமத்துவமான அடிப்படையில் அமையாது; இந்த இணைப்பில் இந்திய சமஸ்டி அமைப்பினுள் இலங்கை விழுங்கப்படுவதாகவே அமையும்; இத்தகைய போக்கானது ஒரு இயல்பான தலைவிதி என்று இந்தியத்தலைவர்கள் பேசுமளவுக்குச் சென்றுவிட்டது' என்று பயங்காட்டினார். அதாவது இந்தியத் தலைவர்கள் இலங்கையை இந்தியாவுடன் இணைக்கப்போகிறார்கள் என்று கூறி இலங்கையின் தனித்துவத்தைப்பேண டி.எஸ் சேனநாயக்கா பிரித்தானியருடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார்.

1947ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி அப்போது இலங்கையில் ஆள்பதியாக இருந்த சேர் கென்றி மொங் மேசன்மூர் (Sir Henry Monck Moore) டி.எஸ் சேனநாயக்காவுடன் இலங்கைப் பிரித்தானிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தை செய்வதற்கு டி.எஸ் சேனநாயக்கா பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறவில்லை.

- நக்கீரன்

படிப்பகம்